

சுதந்திரப் போராட்ட வீராங்கனை

வீரப்பேரரசி, வீரமங்கை

வேலு நாச்சியார் அவர்களின்

296 வது பிறந்தநாள் 03.01.2026

ஆங்கிலேயர் ஆட்சிக்குத் தலை வணங்காத தன் கணவர், சிவகங்கை அரசர் (1750 – 1772 வரை 22 ஆண்டுகள் ஆண்ட) முத்துவடுக நாத பெருவுடையார் அவர்களை வெள்ளையர்களின் சூழ்ச்சியால் காளையார் கோவிலில் கொல்லப்பட்ட பிறகு பிரிட்டிஷ், ஆட்சியின் வசம் இருந்த சிவகங்கை நாட்டை, எட்டு ஆண்டுகால, போருக்குப் பின்னால் மீட்டு, மீண்டும் பேரரசியாக அமர்ந்தவர் வீரமங்கை வேலுநாச்சியார்.

அவருக்கு சென்னை காந்தி மண்டபத்தில் தமிழ்நாடு அரசு சார்பாக திருஉருவச்சிலை அமைத்து, 19.09.2025 அன்று திறந்து வைத்து, வேலூர் காவலர் பயிற்சி நிலையத்திற்கு வேலுநாச்சியார் பெயர் சூட்டியதற்கும், மதுரை சிவகங்கை மேம்பாலத்திற்கு வீரமங்கை ராணி வேலுநாச்சியார் அவர்களின் பெயர் சூட்டியதற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

மு.க.ஸ்டாலின்

அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!

வேலுநாச்சியார் காலத்திற்கு 250 ஆண்டுகளுக்குப்பின் அவரின் வழி வழி வழித்தோன்றல்களான, எங்களையும் 07.12.2025 அன்று மதுரையில் நடந்த வேலுநாச்சியார் பாலத்திறப்பு விழா மேடைக்கு அழைத்து எங்களுக்கு சிறப்பு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் அவரது புகழுக்கும் இன்னும் 250 ஆண்டுகளுக்கு பின்னும் எங்களது வழி வழி வழித்தோன்றல்கள் தங்களுக்கு நன்றியோடு இருப்பார்கள் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வேலுநாச்சியார் அவர்களின் 296–வது பிறந்தநாளான 03.01.2026 அன்று சென்னை, கிண்டி காந்தி மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள வீரமங்கை ராணி வேலுநாச்சியார் அவர்களின் திரு உருவச்சிலைக்கு மலர் தூவி மரியாதை செய்ய வருகை தரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு துணைமுதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

வீரமங்கை ராணி வேலு நாச்சியாரின் வழித்தோன்றல்கள்...

முனைவர் Er. பிரபா நாச்சியார், Er. ஜெயஸ்ரீ நாச்சியார்,
Dr. மோகனா நாச்சியார், Er. சங்கீதா நாச்சியார் USA

இவர்களுடன் காரியாப்பட்டி, சித்தனேந்தல்

கூத்தன்சேதுபதி பால்ச்சாமி அக்ரிகணேசன்




திருவாரூர் மாவட்டம் கோவில்திருமாளத்தைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடி, திருவாரூர் மாவட்ட வேளாண் விற்பனை குழு முன்னாள் தலைவர் 102 வயது பெரியவர் கோ.தட்சிணாமூர்த்தி அவர்களை கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி கல்யாணம் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் குடவாசல் ஒன்றிய குழு முன்னாள் துணை தலைவர் ஆலத்தூர் ஜி.ஆர். பாண்டியன் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக சார்பில் – கழக நிர்வாகிகள் குடும்பத்தில் உள்ள உயர்கல்வி பயிலும்

# 90 வாரிசுகளுக்கு ரூ. 17 லட்சம் மதிப்பில் கலைஞர் கல்வி உதவித் தொகை!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!



*நாமக்கல், ஜன.3-*

*நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் கிளை கழகம், வார்டு கழகத்தில் தற்போது பொறுப்பில் உள்ள அவைத் தலைவர், துணை செயலாளர், பொருளாளர் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர் மற்றும் தொடர்ந்து கழகத்தில் 3 மற்றும் 2 உறுப்பினர் அட்டைகளுக்கு குறையாமல் உள்ளவர்களின் நிர்வாகிகள் குடும்பத்தில் உயர்கல்வி பயிலும் 90 வாரிசுகளுக்கு மாவட்ட கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகையை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்.*

*நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் நாமக்கல் சேந்தமங்கலம் ராசிபுரம் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளில் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் உள்ள கிளை, வார்டு செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் BLA 2 நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள் குடும்ப வாரிசுகளுக்கு கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் வழிகாட்டுதலுடன் மாவட்ட கழக செயலாளர் பொறுப்பேற்றது முதல் முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகை என்ற பெயரில் வழங்கி வருகிறார்.*

*அதன்படி நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், இனமானப் பேராசிரியர் கூட்ட அரங்கில் நாமக்கல் கிழக்கு நகரம் நாமக்கல் மேற்கு நகரம் நாமக்கல் தெற்கு நகரம் ராசிபுரம் நகரம் ஆகிய மூன்று பகுதிகளைச் சேர்ந்த கிளை கழகம், வார்டு கழகத்தில் தற்போது பொறுப்பில் உள்ள அவைத்தலைவர், துணை செயலாளர், பொருளாளர் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர் மற்றும் தொடர்ந்து கழகத்தில் 3 மற்றும் 2 உறுப்பினர் அட்டைகளுக்கு குறையாமல் உள்ளவர்களின் குடும்பத்தில்*

*உயர்கல்வி பயிலும் 90 வாரிசுகளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கி, தொழிற்கல்வி படிக்கும் 41 பேருக்கும், பட்டப்படிப்பு படிக்கும் 49 பேருக்கும் ஆக மொத்தம் 90 வாரிசுகளுக்கு கலைஞர் கல்வி உதவித் தொகையை வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயரும், நாமக்கல் கிழக்கு நகர கழக செயலாளருமான செ.பூபதி, நகரக் கழக செயலாளர்கள் ராசிபுரம் என்.ஆர்.சங்கர், நாமக்கல் தெற்கு ராணா ஆனந்த், நாமக்கல் மேற்கு அ.சிவகுமார் மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதி நிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*


